## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
## கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்

அறிவிப்பு எண்:அ1/ 3975/2025 நாள்: .12.2025

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய தலைப்பின்கீழ் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர் பணியிடத்திற்கு **SC(A)/W-DW** என்ற இனசுழற்சி முறையில் நிரப்புவதற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டு இணையதளம் வாயிலாக விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டது. இந்நிலையில் **SC(A)/W-DW** என்ற இன சுழற்சியின் கீழ் தகுதியான விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படாததால் கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய தலைப்பின்கீழ் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர் பணியிடத்தினை பூர்த்தி செய்யும் / நிரப்பும் பொருட்டு **SC(A)/W** எனும் இனசுழற்ச்சியில் தகுதியான நபர்களிடமிருந்து 06.11.2025 முதல் 20.11.2025 வரை நேரடியாக / அஞ்சல்வழியாக பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு 15.12.2025 அன்று சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் தகுதித்தேர்வில் கலந்துகொண்ட விண்ணப்பதாரரில் தகுதியான நபர் எவரும் இல்லாத காரணத்தினால் அரசுப் பணியாளர்கள்(பணி நிபந்தனைகள்) சட்டம் 2016ல் பிரிவு–26 மற்றும் 27–ன் அடிப்படையில் கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில், ஒன்றிய தலைப்பின்கீழ் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர் பணியிடத்தினை பூர்த்தி செய்யும்/நிரப்பும் பொருட்டு **SC(A)/G- பட்டியல் சாதியின அருந்ததியர் – (பொது)** எனும் இனசழற்சியில் தகுதியான நபர்களிடமிருந்து **30.12.2025 முதல் 14.01.2026 வரை** நேரடியாக / அஞ்சல்வழியாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**பணியிட விவரம் பின்வருமாறு.**

| பொருள் | | ஈப்பு ஓட்டுநர் |
|---|---|---|
| 1 | ஊதியம் | Level–8 (ரூ.19500 – 71900) |
| 2 | வயது | 18–42 |
| 3 | 01.07.2025 அன்று<br>அதிகபட்ச வயது வரம்பு<br>இனம் வயது வரம்பு | 42 |
| 4 | மொத்த பணியிடங்கள் | 1 |
| 5 | இனசுழற்சி விவரங்கள் | SC(A)/G<br>பட்டியல் சாதியின அருந்ததியர்–(பொது) |
| 6 | கல்வித்தகுதி மற்றும் பிற தகுதிகள் | 1. 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்<br>2. மோட்டார் வாகன சட்டப்படி தகுதியான அலுவலரால் வழங்கப்பட்ட செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்<br>3. 5 ஆண்டுகளுக்கு குறையாமல் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் |
| 7 | விண்ணப்ப படிவம் | விண்ணப்ப படிவம் https://viluppuram.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் |
| 8 | விண்ணப்ப கட்டணம் | ரூ.50/– Block Development Officer(BP), Panchayat Union, Kandamangalam என்ற பெயரில் ரூ.50/– க்கான வங்கி வரைவினை (DD) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும் |
| 9 | விண்ணப்பங்கள் பெறப்படும் காலம் | 30.12.2025 முதல் 14.01.2026 வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரையில் விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது அஞ்சல் வழி மூலமாகவோ விண்ணப்பத்தை கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அளித்திடவும். |

| | | |
|---|---|---|
| 10 | விண்ணப்பிக்க கடைசி நாள் | 14.01.2026 மாலை 5.45 மணி வரை |
| 11 | விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி | ஆணையாளர்,<br>ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கண்டமங்கலம்,<br>விழுப்புரம் மாவட்டம் – 605102 |

<u>நிபந்தனைகள்:</u>

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் https://viluppuram.nic.in என்ற இணையதள முகவரியில் இருந்து விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து அனைத்து படிவங்களையும் முழுமையாக பூர்த்தி செய்து, கல்வித்தகுதி, சாதிச்சான்று, ஒட்டுநர் உரிமம், முன் அனுபவச்சான்று உள்ளிட்ட அனைத்து சான்றிதழ்களின் சான்றொப்பம் இட்ட நகல்களை இணைத்து நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் விண்ணப்பித்திட வேண்டும்.

1.நிர்ணயிக்கப்பட்டுள்ள இனசுழற்சி, வயது, முன் அனுபவம் மற்றும் கல்வித் தகுதியுள்ள நபர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும்.

2.தகுதியில்லாத விண்ணப்பங்கள் மற்றும் காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் முன்னறிவிப்பு ஏதுமின்றி நிராகரிக்கப்படும்.

3.மேலே குறிப்பிடப்பட்டுள்ள இனச்சுழற்சி மற்றும் இட ஒதுக்கீட்டின் படியே நியமனம் மேற்கொள்ளப்படும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணல் நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்த தகவல் அஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம், கண்டமங்கலம்

29/12/26